# விலைக்கேள்விக்கானகோரல்

## கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம்

1. வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களத்திற்காக,பிராந்திய பெறுகைக்குழு / திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும், இருப்பினும் வியாபார பதிவினை வடக்கு மாகாண நிர்வாகஎல்லைக்குள் கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும்,04/2016(i) ம் இலக்க30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதரத்தினை பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனிபதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றியதேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Bidding Data & Contract Data / Schedule** (பகுதி5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் ,கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரிகளில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி & முல்லைத்தீவு மாவட்டங்களுக்குரிய வேலைகளின்** மேலதிகதகவலைப் பெறலாம் என்பதுடன்,அம் முகவரிகளில் **9.00** மணியிலிருந்து **16.00** மணிவரை அலுவலகநாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனைசெய்யலாம்.
6. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கிலமொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை

   **a. பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-2222632 தொலைநகல் 021-2222632)**

   **b. பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், கிருஸ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சி. (தொலைபேசி இல: 021-2285599 தொலைநகல் 021-2285599)**

   **எனும் முகவரிகளில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.07.2017முதல் 26.07.2017வரை 9.00 மணியிருந்து 15.00 மணிவரையான** காலப்பகுதியில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) **27.07.2017ம்** திகதியன்று **மு.ப10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர்,பிராந்திய பெறுகைக்குழு / திணைக்களப் பெறுகைக்குழு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கானகேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள்,அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்விதொடர்பான முதற் கூட்டம் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்,கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் என்னும்** முகவரியில் **19.07.2017** அன்று **மு.ப10.30** மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| **கேள்விஅடையாள இல** | **வேலைவிபரம்** | **பெறுகைக் குழு** | **மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்)** | **ஒப்பந்த காலம்** | **தேவையானதரம்** | **மீளளிக்கப்படாததொகை** | **கேள்விப் பிணைவிபரம்.** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | **தொகை** | **தேவைப்படும் காலம்.** |
| NP/B/JA/19 (2017) | யா/கற்கோவளம் மெதடிஸ் ஞாபகார்த்த தமிழ் கலவன் பாடசாலையில் வகுப்பறைக் கட்டடம் (50×25×2 - மேல்தளம்) நிர்மாணித்தல். கட்டம் - 2 | பிராந்திய பெறுகைக்குழு | 2.75 | 2 மாதங்கள் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 28,000.00 | 25.10.2017 **வரை** |
| NP/B/JA/32 (2017) | யா/இந்து ஆரம்ப பாடசாலையில் வகுப்பறைக் கட்டடம் (110×25×2 – மிகுதி வேலைகள்) நிர்மாணித்தல். கட்டம் - 2 | திணைக்களப் பெறுகைக்குழு | 11.34 | 6 மாதங்கள் | C6 அல்லது C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 114,000.00 | 08.11.2017 **வரை** |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| NP/B/JA/35 (2017) | யா/சென்யோன்ஸ் பொஸ்கோ வித்தியாலய வகுப்பறைக் கட்டடம் அத்துடன் கலையரங்கம் (கீழ்தளம்) நிர்மாணித்தல். கட்டம் - 1 | திணைக்களப் பெறுகைக்குழு | 9.83 | 7 மாதங்கள் | C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 99,000.00 | 08.11.2017 **வரை** |
| NP/B/JA/36 (2017) | யா/புங்குடுதீவு திருநாவு கரசு வித்தியாலய வகுப்பறைக் கட்டடம் புதுப்பித்தல் | பிராந்திய பெறுகைக்குழு | 3.90 | 3 மாதங்கள் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 39,000.00 | 25.10.2017 **வரை** |
| NP/B/JA/37 (2017) | யாழ்ப்பாணம் அச்சுவேலியில் நீதிமன்றங்களினால் குறிப்பிடப்படுகின்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அறை நிர்மாணித்தல் | திணைக்களப் பெறுகைக்குழு | 15.00 | 8 மாதங்கள் | C6 அல்லது C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 150,000.00 | 08.11.2017 **வரை** |
| NP/B/KI/12 (2017) | கிளிநொச்சி பிரதம எந்திரி அலுவலகம் கட்டடங்கள் திணைக்கள கட்டடம் விரிவுபடுத்தலும் புதுப்பித்தலும் | பிராந்திய பெறுகைக்குழு | 4.21 | 3 மாதங்கள் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 43,000.00 | 25.10.2017 **வரை** |
| NP/B/KI/13 (2017) | கிளிநொச்சியில் நீதிமன்றங்களினால் குறிப்பிடப்படுகின்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அறை நிர்மாணித்தல் | திணைக்களப் பெறுகைக்குழு | 15.00 | 8 மாதங்கள் | C6 அல்லது C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 150,000.00 | 08.11.2017 **வரை** |
| NP/B/MU/12 (2017) | முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிராந்திய வைத்தியசாலையில் நீர் வழங்கள் அமைப்பு | பிராந்திய பெறுகைக்குழு | 4.74 | 3 மாதங்கள் | C8 அல்லது C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 48,000.00 | 25.10.2017 **வரை** |
| NP/B/MU/13 (2017) | முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் கடுமையான மனநல அலகு நிர்மாணித்தல் கட்டடம் -1 | திணைக்களப் பெறுகைக்குழு | 9.26 | 6 மாதங்கள | C7 (கட்டடங்கள்) | 3,500.00 | 93,000.00 | 08.11.2017 **வரை** |

தவிசாளர்
பிராந்திய பெறுகைக்குழு / திணைக்களப் பெறுகைக்குழு
கட்டடங்கள் திணைக்களம்
வடமாகாணம்